KTEJ 2026 03 (1): 35 – 53

Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 03, Issue I, 2026

# 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் உருவாக்கத்தில் இராமகிருஷ்ண மிஷனின் வகிபங்கு

# The Role of the Ramakrishna Mission in the Establishment of Schools in the Eastern Province during the Early 20th Century

செ. நிலாந்தினி

கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

nilanthinic@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் கிழக்கு மாகாணத் தமிழர் சமூகமானது கல்வி மற்றும் பண்பாட்டு துறைகளில் எதிர்நோக்கிய சவால்களின் பின்னணியில், இராமகிருஷ்ண மிஷன் சுதேச மக்களின் கல்விக்கு கனிசமாக பங்காற்றியுள்ளது. மேலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய காலனித்துவ சக்திகளின் ஆதிக்கத்தால், கிழக்கிலங்கையின் சமய, மொழி, பண்பாடு மற்றும் கல்வி துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக பிரித்தானியர் காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளின் பாடசாலைகள் கல்வித் துறையில் மேலாதிக்கம் செலுத்தியதன் விளைவாக சுதேசிகளின் சமய, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் சிதைவடைந்தன.(கோபாலசிங்கம், 2011). இந்நிலையில் சேவையை அடிப்படையாகக் கொண்டு கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இராமகிருஷ்ண மிஷன் களமிறங்கியது. இந்து சமய அடையாளம், சுதேச பண்பாடு மற்றும் மொழி சார்ந்த கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பல பாடசாலைகளை நிறுவியது. இவ்வாய்வு, அந்த பாடசாலைகளின் உருவாக்கத்தில் மிஷனின் பங்களிப்பு, அவற்றின் சமூக விளைவுகள், மற்றும் பிரித்தானிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக மிஷன் முன்னிறுத்திய கல்வி வடிவமைப்பை விரிவாக மதிப்பிடுகிறது. ஆய்வின் மையப் பிரச்சினையாக, கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷனின் கல்விசார் பங்களிப்புக் குறித்த ஆய்வு முயற்சிகள் காலனித்துவக் கால அறிக்கைகளை மையப்படுத்தி போதுமான அளவில் முன்னெடுக்கப்படாமை ஆய்வு இடைவெளியை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக மிஷன் சுதேச மக்களின் மத, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்திருந்தாலும், அதனைப் பற்றிய ஆய்வுகள் உதிரிகளாகவே இடம்பெற்றுள்ளன. எனவே இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையில் ஒரு விபரணவியல் ஆய்வாக அமைகின்றது. அத்தோடு வரலாற்று ஆவணங்கள், காலனித்துவகாலக் குறிப்புக்கள், பாடசாலைப் பதிவுகள், ஆண்டு அறிக்கைகள், பத்திரிகைக் குறிப்புகள், கடிதங்கள் மற்றும் நேர்காணல்கள் போன்ற தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இத்தரவுகளின் அடிப்படையில் இராமகிருஷ்ணமிஷன், 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் தமிழ் சமூகத்தின் கல்வி

முன்னேற்றத்துக்கு மட்டுமல்லாமல், அதன் பண்பாட்டு அடையாளப் பாதுகாப்பிற்கும் முக்கிய பங்களிப்பாற்றியமை வெளிப்படையாகின்றது.

**திறவுச் சொற்கள்:** *கல்வி மறுமலர்ச்சி, இராமகிருஷ்ணமிஷன், கிழக்கு மாகாணம், காலனித்துவம், பாடசாலைகள்*

## Abstract

This study explores the historical contribution of the Ramakrishna Mission to the Tamil society of the Eastern Province during the early 20th century. In this period, several significant changes occurred in the educational and cultural spheres. The religious, linguistic, and educational structures of Eastern Sri Lanka were profoundly affected by the dominance of European colonial powers such as the Portuguese, Dutch, and British. During the British period, the influence of Christian missionary schools became dominant in the field of education. This resulted in the erosion of the religious, linguistic, and cultural identities of the indigenous people (Gopalasingam, 2011). During this period, the Ramakrishna Mission emerged to bring change to the educational sector through its service-oriented approach. It established several schools in the districts of Batticaloa and Trincomalee by promoting education with Hindu religious identity, indigenous culture, and the Tamil language. This study evaluates in detail the Mission's contribution to the establishment of these schools, their social impact, and the alternative educational model the Mission introduced in contrast to British educational policies. The central issue of this research is the lack of adequate academic studies on the educational contributions of the Ramakrishna Mission in the Eastern Province, which has created a research gap. Although the Mission played a significant role in safeguarding the religious, linguistic, and cultural identity of the indigenous population, scholarly attention and social awareness in this area remain insufficient. The study employs historical methodology. Primary and secondary sources such as historical documents, colonial records, school registers, annual reports, newspaper articles, letters were analyzed and interviews were conducted. Through the findings, that the Ramakrishna Mission not only contributed to the educational advancements of the Tamil community in the early 20th century but also played an important role in preserving the cultural identity.



**Keywords***: Educational Renaissance, Ramakrishna Mission, Eastern Province, Colonialism, Schools.*

## 1. அறிமுகம்

இலங்கையில் போர்த்துக்கேயர் வருகையால் தீவிரமடைந்த சமயப்பரப்புகையும் மதமாற்றமும் ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவு குறைக்கப்பட்டாலும் அச்செயற்பாடுகள் பிரித்தானியர் காலத்தில் இராஜதந்திர அணுகுமுறையுடன் இணைந்ததாக நகர்த்திச் செல்லப்பட்டது. இப்போக்கானது பாரிய சமூக, பொருளாதார மாற்றத்திற்கு வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது. புராதன காலம் தொடக்கம் இந்து சமய மக்கள் செறிந்து வாழ்ந்த கிழக்கிலங்கையில் ஐரோப்பிய காலனித்துவம் நவீனத்துவமான மாற்றங்களுக்கு அடித்தளமாக அமைந்தது. குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் பிரித்தானியருடைய ஆட்சிக் காலத்தில் மிசனரிக் கல்வியினூடாக உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கையும் பாடசாலைகளும் அதற்குச் சாதகமாக அமைந்தன. இந்நிலையில் 1900 தொடக்கம் 1950 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிழக்கிலங்கையின் பாடசாலைகளின் உருவாக்கத்தில் இராமகிருஷ்ண மிஷனின் வகிபங்கானது வரலாற்றுப் அணுகுமுறையில் ஆராயப்பட்டுள்ளது.

### 1.1. ஆய்வு நோக்கங்கள்

- ஆய்வின் நோக்கங்களாக 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷனின் கல்விசார் பங்களிப்பை ஆராய்தல்
- மிஷனால் நிறுவிய பாடசாலைகள் மற்றும் அவற்றின் சமூக தாக்கத்தை வெளிக்கொணர்தல்,
- பிரித்தானிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக இராமகிருஷ்ண மிஷன் ஏற்படுத்திய கல்வி வடிவமைப்பை மதிப்பிடுதல் என்பனவாகும்.

### 1.2. ஆய்வு வினாக்கள்

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் கல்வி நிலை பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனரிகளின் கட்டுப்பாட்டில் அமைந்திருந்தது. இதனால் கிழக்கு மாகாணச் சுதேசிகளின் சமய, மொழி மற்றும் பண்பாட்டு அம்சங்கள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில், கிழக்கு மாகாணத்தில் சுதேசிகளின் அடையாளத்தையும் சமயத்தினையும் தக்கவைத்துக் கொள்ளப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டனவா? அவ்வாறாயின் அவை நிறுவப்பட்ட இடங்கள் எவை? அதன் சேவைகள் என்ன? என்பதனை ஆய்வு வினாக்களாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

### 1.3. கருதுகோள்

இராமகிருஷ்ணமிஷன், 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றம், பாடசாலைகளின் உருவாக்கம் மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் பாதுகாப்பிற்கு முக்கிய பங்காற்றியது.

### 1.4. ஆய்வு வரையறை

இவ்வாய்வானது 1900 தொடக்கம் 1950 வரையான கால எல்லையையும் ஆய்வுப் பிரதேசமாகக் கிழக்கு மாகாணத்தினையும் மையப்படுத்தியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இராமகிருஷ்ண மிஷன் நிறுவிய பாடசாலைகள் மற்றும் அவற்றின் கல்விசார் தாக்கம் இவ்வாய்வின் மையமாக அமைகின்றன.

## 2. இலக்கிய மீளாய்வு

கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷனின் கல்விசார் பங்களிப்புக் குறித்து நேரடி ஆய்வுகள் மிகக் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இராமகிருஷ்ண மிஷன்,

சுவாமி விபுலானந்தர் தொடர்பாக பல ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் காலத்திற்குக் காலம் வெளிவந்துள்ளன. அந்தவகையில் கீழ்வரும் இலக்கியங்களைக் குறிப்பிடமுடியும்.

மௌனகுரு, (1993) சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும், விபுலானந்த அடிகளாரின் சமூக கலை இலக்கிய நோக்கு, தமிழ் உணர்வரலாறும் விபுலானந்தரின் தமிழுணர்வும் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. மணி, (1997) இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம் என்ற நூலில், 19 ஆம் நூற்றாண்டில் இலங்கை இந்து பண்பாட்டுச் சுழல், சிகாகோ பயணத்தில் சூழ்ந்த சோதனைகளும் துன்பங்களும், சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகைகள் மற்றும் மிஷனின் தோற்றம் வளர்ச்சி என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அழகரெத்தினம், (2001) சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகளும் தொண்டுகளும் என்ற நூலில் விபுலானந்தரின் வாழ்க்கையும் கல்வி வளர்ச்சியும், கல்வித் தத்துவமும் தொண்டுகளில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளும், பல்வகைக் கல்வி, கல்வித் தொண்டுகள், பல்கலைக்கல்வி என பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழா மலர், (2021) என்ற நூலில் மிஷன் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக அதன் சேவைகள், வளர்ச்சிக் கட்டங்கள், சுவாமிகளின் வருகையும் அவர்களது காலத்தில் ஆற்றிய முக்கிய சேவைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

திமிலைமகாலிங்கம், (1992) சிறுவருக்கு விபுலானந்தர், மற்றும் நீலமாதாவானந்தர், (2025) சிறுவர்களுக்கு விபுலானந்தர் போன்ற நூல்களில் விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது ஆளுமை, சேவைகள் என்பன விபரிக்கப்பட்டடுள்ளன.

சிவசுப்ரமணியம், (1993) விபுலாநந்த தரிசனம், சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் அடங்கிய விபுலானந்தம் போன்ற நூல்களில் விபுலானந்தரின் பல்துறை ஆளுமைகள், சேவைகள், தியாகங்கள் போன்ற பல விடங்கள் நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளன. அத்தோடு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா மலர், ஏனைய சஞ்சிகைகள் இராமகிருஷ்ண மிஷனின் உருவாக்கம், சேவைகள் குறித்து பல உதிரியான கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

எனவே கிழக்கு மாகாணத்தில் தமிழ் சமூகத்தின் கல்வி தேவைகள் மற்றும் மத அடையாளத்தை பாதுகாப்பதற்காக உருவான பாடசாலைகள் குறித்து உதிரிகளான கட்டுரைகள் எழுதப்பட்டிந்தாலும் அவை காலனித்துவ கால அறிக்கைகளை மையப்படுத்தி வரலாற்று அணுகுமுறையில் ஆராயப்படாமை ஆய்வு இடைவெளியை உருவாக்கியுள்ளது. இப்பின்னணியிலே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வு முறையியல்

ஆய்வு வரலாற்று அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ணமிஷன் கல்வித்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை வரலாற்றுப் பதிவுகள், மிஷனின் கீழ் இயங்கிய பாடசாலைகளின் பதிவுகள், ஆண்டறிக்கைகள், பத்திரிகைக் குறிப்புக்கள், கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் நேர்காணலினூடாகத் தரவுகள் திரட்டப்பட்டன. பின்னர் சமகாலத்தில் பிரித்தானியர் கால ஆவணக் குறிப்புக்கள், பாடசாலைகள் மற்றும் சமயக் குறிப்புக்களையும் ஆராய்ந்து வரலாற்று அணுகுமுறையில் விபரணவியல் ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது.

## 4. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

### 4.1. விவேகானந்த சபைகளும் இராமகிருஷ்ணமிஷனின் உருவாக்கமும்

இராமகிருஷ்ணமிஷன் தோற்றம் பெறுவதற்கு முன்பு இலங்கையில் விவேகானந்த சபைகள் உருவாக்கம் பெற்றன. 1906 ஆம் ஆண்டு, திருகோணமலையில் கிழக்கிலங்கையின் முதலாவது விவேகானந்த சபை நிறுவப்பட்டது (மணி, 1997). அச்சபை நூலகத்தில், சுவாமியின் நூல்கள் பல சேகரித்து வைக்கப்பட்டன. சுவாமி விவேகானந்தர் விளக்கியவாறு இந்து சரித்திர நூல்களை கற்க வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1924 ஆம் ஆண்டில் இந்தச் சபையின் அழைப்பை ஏற்று சுவாமி சர்வானந்தர் சுவாமி விபுலானந்தருடன் வருகை தந்து எழுச்சியூட்டும் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். இவ்வருகை விவேகானந்த சபைக்கு மிகப் பெரிய அளவில் ஊக்கமளித்தது. இதன் காரணமாக 1925 ஆம் ஆண்டு திருகோணமலையில் இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமம் உருவாக்கம் பெற்றது(மணி, 1997).

சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க சிஷ்யைகளுள் ஒருவரான சகோதரி அவபாமியா அம்மையார் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து கிராமங்கள் தோறும் இந்து சமயப் பிரச்சாரம் செய்தமையால் நாடெங்கிலும் ஓர் எழுச்சி உண்டாயிற்று. அத்தோடு மட்டக்களப்பில் மண்டூரில் பெண்கல்விக்காக பாடசாலையை நிறுவினார். மேலும் மட்டக்களப்புக் கல்லடியில் விவேகானந்தா பாடசாலைக்கான அத்திவாரத்தினையிட்டு பெண் கல்விக்கான ஆரம்பப் பணிகளைச் செய்தார் (மகேஸ்வரலிங்கம், 2008).

மட்டக்களப்பிற்கு வருகைதந்த இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் இங்குள்ள சைவப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்ததுடன் அவர்களது கருத்துக்களையும் பதிவு செய்துள்ளனர். 1918ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சுவாமி சர்வானந்தர் மட்டக்களப்பிற்கு வந்து இங்கு உத்வேகத்துடனும் அதேசமயத்தில் இன்னல்களுக்கிடையில் சமயப்பணி புரிந்துவந்த பாடசாலைகளையும் பொது மக்களையும் சந்தித்தார். சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ணமிஷனின் பணிகளை ஆரம்பிப்பதற்காக கிழக்கு மாகாணத்திற்கு வருமுன்பே ஆனைப்பந்தி (1902), ஆரைப்பற்றை (1912), கல்லடி உப்போடை (1912), காரைதீவு (1912), மண்டூர், (1918) மற்றும் முறக்கொட்டாஞ்சேனை (1914) மற்றும் ஈச்சந்தீவு ஆகிய மட்டக்களப்புக் கிராமங்களில் மக்களின் முயற்சியால் சைவப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. திருகோணமலையில் பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு அருகில் இந்து ஆங்கில பாடசாலை, கோணேஸ்வரா வித்தியாலயம் என 1922 ஆம் ஆண்டுக்கு முன் இரு பாடசாலைகள் நிறுவப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மக்கள் சைவப்பாடசாலைகளை அமைத்ததோடு நின்று விடவில்லை. ஆலயங்களில் சொற்பொழிவுகள், சமயப் பிரசங்கங்கள் என்பனவற்றையும் நிகழ்த்தினர். சைவ நூல் நிலையங்களும் வாசிகசாலைகளும் திறக்கப்பட்டன. மட்டக்களப்பு நகரில் சுத்தாத்வைத அச்சியந்திரசாலை நிறுவப்பட்டிருந்தது. இவ்வச்சியந்திரசாலையில்தான் மட்டக்களப்பு வித்துவான் ச.பூபாலப்பிள்ளை அவர்களின் "தமிழ் வரலாறு" என்னும் நூல் 1920ஆம் ஆண்டில் சிறப்பான முறையில் வெளிவந்தது (சிவசுப்ரமணியம், 1993).

ஆரம்பத்தில் சுவாமி விபுலானந்தர் திருகோணமலையில் சுவாமி சர்வானந்தரால் உருவாக்கப்பட்ட ஆச்சிரமத்தில் வசித்துக்கொண்டு தமது பணிகளைத் தொடர்ந்தார். இந்த ஆச்சிரமம் திருகோணமலை இந்துக்கல்லூரியிலிருந்து சிறிது தூரத்தில் காணப்பட்டது (சிவசுப்ரமணியம், 1993).

கிழக்கிலங்கை மக்கள் தோற்றுவித்த பாடசாலைகள் காலனித்துவ சமயத்தாபனங்களின் போட்டியை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது. அதன் நிருவாகிகள் தங்கள் சொந்தத் தொழிலைக் கவனிக்க வேண்டியிருந்ததால் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு தமது முழுமையான பங்களிப்பினை

வழங்க முடியாமலிருந்தது. அத்தோடு போதுமான சிறந்த ஆசிரியர்கள் இன்மை, நிதிப்பற்றாக்குறை என்பன பாரிய சவால்களாக இருந்தன. இவ்வாறு பாடசாலை நிருவாகம் திணறிக்கொண்டிருந்த நிலையில்தான் சுவாமி விபுலானந்தர் இங்கு வந்தார். கிழக்கின் மக்கள் பாடசாலைகளை அடிகளார் மூலம் இராமகிருஷ்ணமிஷனிடம் ஒப்படைக்க முடிவெடுத்தனர். குறிப்பாக முதலியார் கா.வ.மார்க்கண்டன் அவர்களும், மட்டக்களப்பு விவேகானந்தசபைத் தலைவர் அப்புக்காத்து சின்னையா அவர்களும் தமது நிருவாகத்தின் கீழ் இயங்கிய காரைதீவு, ஆரையம்பதி, மண்டூர், புளியந்தீவு (ஆனைப்பந்தி) மற்றும் ஈச்சந்தீவு ஆகிய ஊர்களிலிருந்த சைவப்பாடசாலைகளை 1925 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் மூலம் இராமகிருஷ்ண சங்கத்திடம் கையளித்தனர். திருகோணமலையில் நிறுவப்பட்டிருந்த இந்து ஆங்கில பாடசாலையையும் கோணேஸ்வரா வித்தியாலயத்தையும் அதன் முகாமையாளரான முதலியார் வி.வல்லிபுரம்பிள்ளை சுவாமிகளிடம் ஒப்படைத்தார். வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம் அதுவரை சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தின் மேற்பார்வையின்கீழ் இருந்தது. அப்பாடசாலை சுவாமி விபுலானந்தர் மூலமாக இராமகிருஷ்ண சங்க இலங்கைக் கிளையிடம் 1926ஆம் ஆண்டு மாசிமாதம் 16ஆம் திகதி கையளிக்கப்பட்டது. சுவாமி மேற்கூறிய பாடசாலைகளை ஏற்றுக்கொண்டதுடன் நின்றுவிடாமல் எங்கெங்கு பாடசாலைகள் அமைப்பது அவசியமெனக் கண்டாரோ அங்கெல்லாம் பாடசாலைகளை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார் (சிவசுப்ரமணியம், 1993).

குறிப்பாக காரைதீவு சாரதா பெண்கள் பாடசாலைக்கான அடிக்கல் 1925ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நாட்டப்பட்டது. அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது இந்து ஆங்கில பாடசாலையாகிய ஸ்ரீ சிவாநந்தா வித்தியாலயத்திற்கான அடிக்கல் அதே ஆண்டு மார்கழி மாதம் நாட்டப்பட்டது. இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பில் சுவாமி விபுலானந்தர் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்திலும் இராமகிருஷ்ண சங்கம் இலங்கையில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஒரு சங்கமாக உருவாக்கம் பெறவில்லை. சமகாலத்தில் சுவாமி அவிநாசானந்தர் இலங்கைக்கு வந்து கொழும்பில் தங்கியிருந்து இராமகிருஷ்ண சங்கத்திற்கான சட்ட அங்கீகாரம் பெறும் முயற்சியிலீடுபட்டார். அவரது முயற்சியின் பயனாக இராமகிருஷ்ண சங்கத்திற்கு (இலங்கைக் கிளை) இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கிய சட்டவரைவு அக்காலத்திலிருந்த ஆங்கில தேசாதிபதியால் 17 ஆம் திகதி ஆடி மாதம் 1929 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

### 4.2. சுவாமி விபுலானந்தரும் கல்விப் பணிக்காற்றிய சேவைகளும்

சுவாமி விபுலானந்தர் தனது கல்விக் கொள்கையில், பாரதியின் எழுச்சிப் பாடல்கள், சுயசார்புப் பொருளாதாரம், நமது பல்கலைக்கழகத்தை நாமே நிறுவ வேண்டும், சமத்துவமும் சமவாயக் கொள்கையும், பெண்கல்வி, தேசப்பற்று, சமய சமத்துவமும் சுதந்திரமும், மும்மொழிக்கற்கை, தமிழ் இலக்கியங்களை வேறு மொழிக்கும் வேறு மொழியில் உள்ள இலக்கியங்களைத் தமிழ் மொழிக்கும் மொழி பெயர்த்தல், கலைச் சொல்லாக்கப்பணி, தமிழில் முழுமையான கச்சேரி, சாதி வேற்றுமைகளைக் நீக்குதல், இந்துக்கள் அல்லாத ஏனைய மாணவர்களின் கல்விக்கு வழிகாட்டல் மற்றும் மாணவர் இல்லங்களை அமைத்தல் எனப் பல செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்தார் (அழகரெத்தினம், 2001).

சுவாமி விபுலானந்தர் கல்வி, இலக்கியம் மற்றும் சமயம் முதலிய துறைகளில் கிழக்கில் புரிந்து கொண்டிருந்த மகத்தான சேவையை மக்கள் மதித்துப் போற்றினார்கள். மட்டக்களப்பு மக்களைப் பொறுத்தவரையில் இராமகிருஷ்ண சங்கமென்றால் சுவாமி விபுலானந்தர்தான். தாம் எந்தச் சங்கத்தின் சார்பாக பெரும்பணிகளைச் செய்து கொண்டிருந்தாரோ அச்சங்கத்தைப்பற்றி மக்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை என்பதை உணர்ந்த அடிகளார், குருதேவரின் சிஷ்ய பரம்பரை, இராமகிருஷ்ண சங்கத்தின் அமைப்பு அதன் உலகளாவிய தொண்டுகள் குறிப்பாக அச்சங்கம்

இலங்கையில் புரிந்துவரும் பணிகள் என்பவற்றை விளக்கி "இலங்கை இராமகிருஷ்ண சங்கம்" என்ற பெயரில் சிறு பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட இப்பிரசுரத்தில் திகதி குறிப்பிடப்படவில்லை. அதன் உள்ளீட்டில் 1927 ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது (சிவசுப்ரமணியம், 1993).

விபுலானந்த அடிகளார் கிழக்கிலங்கையின் பாடசாலைகளின் உருவாக்கத்தில் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளார். இலங்கையில் 26 பாடசாலைகளை நிறுவியும் மாணவர் இல்லங்களைத் தோற்றுவித்தும் ஏழைக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றினார். திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் பெற்றோரை இழந்து வறுமையில் வாடுகின்ற மற்றும் கல்வி கற்க வசதியற்ற மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு மாணவர் விடுதிகளையும் உருவாக்கினார். பெண் குழந்தைகள் கற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். எல்லாப் பாடசாலைகளிலும் பொதுமுகாமையாளராக அவர் பணியாற்றினார். சுவாமி அவினாஷானந்தர் சமகாலத்தல் சுவாமிக்கு உதவியாகப் பணிபுரிந்தார்.

1933 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு மாணவரில்லக் கிளைப் பொறுப்பாளராக (முகாமையாளராக) கடமை ஏற்றார். அக்காலப்பகுதியில் குறிப்பாக 1935 ஆம் ஆண்டு சிவானந்தா வித்தியாலயத்தில் மாணவர்கள் தங்குவதற்கான வதிவிட வசதி ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு 1937 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கான விடுதி காரைத் தீவில் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது (திமிலைமகாலிங்கம், 1992).

1929 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. வண்ணார் பண்ணையில் இருந்த மாணவர் இல்லம் மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்டது. 6 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் இல்லம் பல்லாயிரம் மாணவர்களுக்கு கல்வி வழங்கியதோடு, தற்போதுவரை அதன் சேவைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வசதி குறைந்த மாணவர்களுக்கும் தாய் தந்தையரை இழந்த மாணவர்களுக்கும் உணவு, உடை, உறைவிடம் மற்றும் உபாசனங்கள் ஆகியவற்றை வழங்கி சேவையாற்றி வருகின்றது. பெண் பிள்ளைகளுக்குத் தனியான இல்லமாக 'சாரதா இல்லம்' என்ற பெயருடன் காரைத்தீவில் இயங்கியது. சுவாமிகளிடத்தில் அன்பு கொண்ட மக்கள் கல்லூரிகளையும் விடுதிகளையும் அமைப்பதற்கான நிலங்களைத் தானமாக கொடுத்தாலும் பணத்திற்காக அவர் பலரிடம் சென்று நன்கொடைகள் பெற வேண்டியிருந்தது.

மேலும் கிழக்கிலங்கையில் சுவாமி விபுலானந்தரால் உருவாக்கப்பட்ட குருகுலக்கல்வி முறையானது இன்றுவரை பல சுவாமிகளின் வழிநடத்தலுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுவாமிகள் வரிசையில் சுவாமி அவிநாசானந்தர், அனந்தானந்தர், சுவாமி பரிபூரணானந்தர், சுவாமி சுந்தரானந்தர், சுவாமி கேதாரேஸ்வரானந்தர், சுவாமி நிஷ்காமானந்தர், சுவாமி ரிதஜானந்தர், சுவாமி ரிஷிகேசானந்தர், சுவாமி சர்வாதீதானந்தர், சுவாமி கூடஸ்தானந்தர், சுவாமி அவ்யயானந்தர், சுவாமி நடராஜானந்தர் ஆகியோர்களைக் குறிப்பிடலாம் (கும்பாபிஷேகப் பெருவிழா மலர், 2021)

குருகுலத்திலே தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக இணைகின்ற குழந்தை, சிறுபராயம் முதல் வாழ்க்கைப் பாடத்துடன் இணைந்த அறவழிப் போதனைகளைத் திறம்படக் கற்று சமூகத்தில் ஒரு நற்பிரஜையாக உருவாவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றது.

குருகுல மாணவர்கள் நித்திரை விட்டெழுந்தால் திருப்பள்ளியெழுச்சி, எண்ணைக்குளியல், தண்டால் பயிற்சி, சூரிய நமஸ்காரம், சமஸ்கிருத ஸ்லோகங்கள், கூட்டுப் பிரார்த்தனை, சரளமான ஆங்கில மொழிப் பயிற்சி, சாப்பிடச் சொல்லும் ஸ்லோகங்கள், கற்றல்

நடவடிக்கைகள், தோட்ட வேலைகள், தியான பயிற்சிகள், கீதா பிரசங்கங்கள் மற்றும் நித்திரை வேளைக்குரிய தேவாரப் பாராயணம் என கட்டுப்பாடான வாழ்க்கை முறையானது ஒரு குழந்தையை பண்படுத்தி பக்குவப்படுத்தி நற்சிந்தனைகளின் மூலம் நல்வழிப்படுத்தலுக்கான களமாகவே அவர்களது வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கின்றது.

ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் காலப்போக்கில் அதற்கு பழக்கப்பட்டு இந்து தர்மம் பேணல், இறை பக்தி மற்றும் பிறருடன் அன்பைப் பகிர்தல் என நேர முகாமைத்துவத்துடன் கூடிய திட்டமிடலை பழக்கப்படுத்திக் கொண்ட சிறார்கள் தங்கள் கல்வியில் மேம்பட்டு சமூகத்தில் நற்பிரஜைகளாக மிளிர்கின்றனர். கல்வி ஒரு மனிதனை வாழ வைக்கின்றது. அந்தவகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடரான சுவாமி விவேகானந்தரால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ணமிஷனின் கல்விக் கொள்கையும் செயற்பாடுகளும் தனி நாட்டு எல்லை கடந்து ஒருமித்த தேசக் கொள்கையாக பல்லின மக்களுக்கும் வழிகாட்டும் ஒளியாக இன்றுவரை திகழ்கின்றது.

### 4.3. கல்வி வளர்ச்சியில் பாடசாலைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும்

கிழக்கிலங்கையில் 19 ஆம் நூற்றாண்டுகளில் கத்தோலிக்க-மெதடிஸ்தசபைப் பாடசாலைகளின் உருவாக்கம், கல்விப் போதனைகளினூடான சமயப் பரப்புகை, ஐரோப்பிய காலனித்துவ சிந்தனைக் கருத்துக்களுக்கும் சமயங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டமை, ஆங்கில மொழிப் பயன்பாடு, ஐரோப்பிய கலாச்சார பண்பாட்டு அம்சங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இந்நிலையில் தனித்துவமான தமிழர் பண்பாட்டு அம்சங்களும் மரபுகளும் மாற்றத்திற்குள்ளாகின.

**அட்டவணை: 01 கிழக்கு மாகாணத்தில் சமய ரீதியாக இயங்கிய பாடசாலைகள் (1918 மற்றும் 1923)**

| **கிழக்கு மாகாணம்** | **பாடசாலைகள் 1918** | **பாடசாலைகள் 1923** | **மாணவர்கள்: 1918** | | **மாணவர்கள்: 1923** | |
|---|---|---|---|---|---|---|
| | | | **ஆண்கள்** | **பெண்கள்** | **ஆண்கள்** | **பெண்கள்** |
| இங்கிலாந்து திருச்சபை | 9 | 8 | 559 | 101 | 422 | 78 |
| இந்து | 9 | 11 | 704 | 206 | 1004 | 241 |
| உரோமன் கத்தோலிக்கம் | 39 | 38 | 2297 | 826 | 1562 | 785 |
| வெஸ்லியன் | 103 | 97 | 5445 | 1594 | 5314 | 1260 |
| மூலம்: The Ceylon Blue Books, 1918 & 1923. | | | | | | |

காலனித்துவ அரசின் அனுசரணையுடன் இயங்கிய இங்கிலாந்து திருச்சபை, உரோமன் கத்தோலிக்கம், வெஸ்லியன் திருச்சபைகளினூடாக கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையே இந்து சமயம் சார்ந்த பாடசாலைகளை உருவாக்கி செயற்படுத்துவது மிகச் சவாலாக அமைந்திருந்தது.

**அட்டவணை 02: கிழக்கு மாகாணத்தில் உள்ள சுதேச பாடசலைகளின் பட்டியல்**

| **மாவட்டத்தின் பெயர்** | **பாடசாலையின் பெயர்** | **மாணவர்களின் எண்ணிக்கை** | | **மொத்தச் செலவு ரூ.** | **கட்டணங் கள் மூலம் வசூலிக்க** | **அரசாங்கத்திற் குரிய நிகரச் செலவு** |
|---|---|---|---|---|---|---|
| | | **ஆண்கள்** | **பெண்கள்** | | | |

| | | | | | ப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்கள் சுதேச பாடசலைகள்-மட்டக்களப்பு | அட்டாளைச்சேனை | 208 | - | 760.00 | - | 760.00 |
| | ஏறாவூர் | 221 | 10 | 637.15 | - | 637.15 |
| | இறக்காமம் | 72 | - | 277.11 | - | 277.11 |
| | காத்தான்குடி | 365 | 3 | 1263.79 | - | 1263.79 |
| | காத்தான்குடி-நெசவு | - | - | 58.6 | - | 58.6 |
| | மருதமுனை | 200 | 14 | 794.7 | - | 794.7 |
| | மரன்கல | 38 | - | 248.0 | - | 248.0 |
| | ஓட்டமாவடி | 215 | - | 621.75 | - | 621.75 |
| | ஒலுவில் | 134 | - | 263.33 | - | 263.33 |
| | சாய்ந்தமருது | 164 | 18 | 638.75 | - | |
| | சம்மாந்துறை | 204 | - | 732.61 | - | |
| | மட்டக்களப்பு-நெசவு | - | - | 125.00 | - | |
| ஆண்கள் சுதேச பாடசலைகள்-திருகோணமலை | கொமரன்கடவல | 14 | 4 | 246.53 | - | 246.53 |
| | கிளிவெட்டி | 26 | 11 | 279.00 | - | 279.00 |
| | மதவாச்சி | 19 | 14 | 248.00 | - | 248.00 |
| | பெரியகிண்ணியா | 189 | - | 566.10 | - | 566.10 |
| | புல்மோட்டை | 57 | - | 327.50 | - | 327.50 |
| | தோப்பூர் | 116 | - | 769.11 | - | 769.11 |
| | நின்டூர் | 117 | 14 | 443.43 | - | 443.43 |
| கிழக்கு மாகாணத்தில் மொத்தம் | | 2359 | 98 | 9299.29 | - | 9299.29 |
| மூலம்:The Ceylon Blue Book, 1921. | | | | | | |

இவ்வட்டவணையினூடாக கிழக்கு மாகாணத்தில் இயங்கிய சுதேச மொழிப் பாடசாலைகளின் விபரம் தரப்பட்டுள்ளது. 1921 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இயங்கிய ஆண்கள் பாடசாலைகளின் விபரத்தை அறியமுடிகின்றது. குறிப்பாக மாணவர்களின் எண்ணிக்கை, பாடசாலைகளை நடாத்துவதற்குத் தேவையான செலவுகளின் மதிப்பீடுகள், கட்டணங்கள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் காலனித்துவ அரசாங்கத்தால் செலவிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிய முடிகின்றது.

இந்நிலையில் கிழக்கிலங்கையில் சமூக, சமய மறுமலர்ச்சியின் விளைவால் காலனித்துவ சிந்தனைகளை எதிர்த்து இராமகிருஷ்ண மிஷனால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளின் விபரங்கள் நூற்றாண்டு மலர்களின் கோவையாக அமைகின்றது.

### (i) அக்கரைப்பற்று உயர்தர தமிழ் கலவன் பாடசாலை

இப்பாடசாலையானது 1944ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்தாலும் 1946ஆம் ஆண்டே பதிவு செய்யப்பட்டது. அப்போது 83 மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் 1954ஆம் ஆண்டில் படிமுறையான வளர்ச்சியால் 422 மாணவர்களையும் 12 ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. பாடசாலைக் கட்டடமானது 30x20 நீள அகலத்தில் களிமண் பாடசாலையாக இருந்தது. அத்தோடு பின்னர் 61x20 நீள அகலத்தில் இன்னுமொரு களிமண் கட்டடம் அமைக்கப்பட்டது. சமகாலக் கல்வித் தேவையை உணர்ந்த மக்கள் மாணவர் தொகைக்கேற்ப உறுதியான கட்டுமானத்தை அமைக்க

வேண்டிய பணியில் அயராது ஈடுபட்டதன் காரணமாக களிமண் கட்டுமானங்கள் செங்கற் கட்டுமானங்களாக உருவாக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு வெறுமனே கற்றல் நடவடிக்கைகள் மட்டுமல்லாது ஒழுக்கம், அறப்பண்புகள், சமயம் சார்ந்த கலைக்கூடமாகத் திகழ்ந்தது (இராமகிருஷ்ண சங்கத் தமிழ்ப் பாடசாலைகள், 1957).

**(ii) காரைதீவு- இராமகிருஷ்ண வித்தியாலயம்**

இப்பாடசாலையானது சுவாமி விவேகானந்தரின் சீடையான அவபாமியா அம்மையாரால் 1912ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைக்கு வேண்டிய நிலம், கட்டுமானம் மற்றும் தளபாட வசதிகளை பெற்றுக் கொள்ள அவ்வூர் பெருமக்கள் உதவி புரிந்தனர். குறிப்பாக இப்பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாண்டுகளிலே அரசினால் அங்கீகரிக்கப்பட்டு உதவி நன்கொடை பெறும் பிரதம தமிழ் கலவன் பாடசாலையாக 1917ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்றுக் கொண்டது. குறிப்பாக திரு.சிற்றம்பலம், திரு.ப.பத்தக்குட்டி, திரு.க.குஞ்சுத்தம்பி போன்றோர் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளனர். பின்னர் பாடசாலையின் நிருவாகத்தை 1925ஆம் ஆண்டு இராமகிருஷ்ண சங்கம் பெறுப்பேற்றுக் கொண்டது. பின்னர் 1928ஆம் ஆண்டு பெண்களின் நலனைக் கருத்திற் கொண்டு இக்கலவன் பாடசாலை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆண், பெண் எனத் தனித்தனிப் பாடசாலைகளாக செயலாற்றத் தொடங்கின. குறிப்பாக 1954ஆம் ஆண்டுகளில் 350 மாணவர்களையும் 10 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு கல்வி நிலையமாக இவ்வித்தியாலயம் காணப்பட்டது (இராமகிருஷ்ண சங்கத் தமிழ்ப் பாடசாலைகள், 1957).

**(iii)காரைதீவு- சாரதா வித்தியாலயம் (பெண்கள் உயர்நிலைப்பள்ளி)**

இப்பாடசாலையானது பொங்கல் தினத்தன்று ஊரவரின் ஒத்துழைப்போடு ஒரு சிறிய கட்டடத்தில் 1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு உயர்தர கல்வி கற்ற மாணவிகள் பலர் பாடசாலையில் இருந்தமையினால் இப்பாடசாலை 1954இல் சாரதா உயர்தர கல்விக்கழகம் என அரசினால் அங்கீகாரம் பெற்றுக்கொண்டது. கற்றல் நடவடிக்கைளில் சிறந்து விளங்கிய பாடசாலையில் 350 மாணவிகளையும் 11 ஆசிரியைகளையும் கொண்டதாக காணப்பட்டது. பாடசாலையில் கற்கையைத் தொடர முடியாத மாணவிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து கல்விக்கூடத்திற்கு அருகிலேயே ஓர் இல்லமும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சமகாலத்தில் அவ்வில்லத்தில் 32 மாணவிகள் தங்கியிருந்து தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறிப்பாக இக்கல்விக் கூடமும் இல்லமும் வெறுமனே கல்வி மட்டுமல்லாது ஆன்மீக வழியில் இந்து சமய விழுமியங்களைத் தழுவியதாக மனித விருத்திக்குரிய சுயதொழில் முயற்சிக்கான அடித்தளமும் இட்டுக் கொடுக்கப்பட்டது.

**(iv)குரடித் தோட்டம் பிரதம கலவன் பாடசாலை**

காரைதீவிற்குத் தெற்கில் உள்ள கரடித்தோட்டம் எனும் பகுதியில் வாழும் பிள்ளைகளின் கல்வி வசதிக்காக சுவாமி நடராஜானந்த அடிகளாரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதே இப்பாடசாலையாகும். குறிப்பாக திரு.க.தம்பிப்பிள்ளை வைத்தியர் பாடசாலைக்கு வேண்டிய நிலத்தை உபகரித்தார்கள். திரு.க.செல்லையா ஆசிரியர் மற்றும் திருமதி.கு.மங்கையர்க்கரசி ஆசிரியையுடன் 25 மாணவர்களோடு 1953 ஆம் ஆண்டில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அரசினர் உதவி நன்கொடை பெற்று இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைக்காரர் நேர் பொறுப்பில் 1956ஆம் ஆண்டு இப்பாடசாலை நடைபெற்றது. 1957ஆம் ஆண்டில் கட்டடம் விசாலப்படுத்தப்பட்டு 120 பிள்ளைகள் படிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டது. அதே ஆண்டுகளில் 122 பிள்ளைகளைக் கொண்டதாக திரு.க.ஆறுமுகம் தலைமை ஆசிரியராகவும் ஆசிரியர்களாக திருமதி.அ.புனிதவதியார், திரு.பெ.இராசமாணிக்கம் திரு.த.மயில்வாகனம் போன்றோரோடு சேர்ந்து இப்பாடசாலை இயங்கியது.

### (v) கல்முனை உயர்தர தமிழ் கலவன் பாடசாலை

இப்பாடசாலையானது 1936ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் திரு.ச.வ.செல்லையா வன்னிமை அவர்களின் மனைவி மூத்ததம்பிப்போடி தெய்வானை அவர்களின் அன்பளிப்பான நிலப்பரப்பில் நாகமணிபோடி உடையார் மற்றும் கிராமத்து மக்களின் ஆதரவினாலும் கல்முனையில் 1927 ஆம் ஆண்டு மடாலயம் அமைக்கப்பட்டது. மடாலயத்திற்கான கட்டுமான வேலைகள் பூர்த்தியடைந்து கொண்டிருந்த நிலையில் மட்டக்களப்பின் தமிழ் கிராமங்கள் பலவற்றிலும் சைவ பாடசாலைகளை அமைக்கும் இராமகிருஷ்ண சங்கத்தின் செயற்பாடுகளை சுவாமி விபுலானந்தர் முன்னெடுத்திருந்தார். இந்நிலையில் இந்து வாலிப சங்கம் அம்மடாலயத்தை 50 இற்கு உட்பட்ட சிறுவர்களுடனும் ஓர் ஆசிரியருடனும் 1936 ஆம் ஆண்டில் கல்விச்சாலையாக மாற்றியது. இது அரசினர் அங்கீகாரம் பெற்று கல்முனை இராமகிருஷ்ண வித்தியாலயம் எனும் பதிவுடன் நிருவாகத்தை கையேற்றது. அதோடு தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக 1941களில் ஐந்து ஆசிரியர்கள் இப்பாடசாலையில் பணியாற்றினர். தொடர்ச்சியாக 1945 ஆம் ஆண்டு பாடசாலையின் வளர்ச்சியாக 375க்கு மேற்பட்ட பிள்ளைகளுடனும் 12 ஆசிரியர்களுடன் பணியாற்றியது. 1947 ஆம் ஆண்டில் பாடசாலைக் கட்டுமானமானது விபுலானந்த மணிமண்டபம், பாரதி மண்டபம் என வளர்ச்சி கண்டதோடு மாணவர்கள் உயர்தரம் வரைக் கல்வி கற்று போட்டிப் பரீட்சைகளில் பல விருதுகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### (vi) மண்டூர் உயர்தர ஆண்கள் பாடசாலை

இப்பாடசாலையானது 1918ஆம் ஆண்டில் ஊர் மக்களின் உதவியால் ஆரம்பிக்கப்பட்டு சைவ பரிபாலன சபையினால் நடத்தப்பட்டு வந்தது. பின்னர் சமயத்தையும் கல்வியையும் வளர்க்கும் நோக்குடன் இயங்கிய இராமகிருஷ்ண மிஷனிடம் 1925இல் பாடசாலை ஒப்படைக்கப்பட்டது. சமகாலத்தில் திரு.வ.பத்தக்குட்டி ஆசிரியர் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் 1948ஆம் ஆண்டுகளில் 13 ஆசிரியர்களுடனும் 475 பிள்ளைகளுடனும் உச்ச வளர்ச்சியடைந்திருந்தது. அப்போது பாடசாலையின் தலைமை பொறுப்பு திரு.வே. மயில்வாகனம் ஆசிரியரால் முன்னெடுக்கப்பட்டது. குறுகிய காலத்தின் பின்னர் இப்பாடசாலை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

### (vii) மண்டூர் உயர்தர பெண்கள் பாடசாலை

சுவாமி விபுலானந்தரின் ஆலோசனையுடன் காலம் சென்ற ஸ்ரீமான் வ.பத்தக்குட்டி ஆசிரியரின் விடாமுயற்சியால் 1953 ஆம் ஆண்டில் இப்பாடசாலை உருவாக்கம் பெற்றது. அப்போது 5 ஆசிரியைகளும் 171 மாணவிகளும் இருந்தனர். பின்னர் மாணவிகளின் தொகை படிப்படியாக அதிகரித்தது. மேலும் பாடசாலையின் வளர்ச்சிகளாக சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர வகுப்பில் 6 மாணவிகள் சித்தி அடைந்துள்ளனர். அத்தோடு ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்புப் பரீட்சைகளில் திறமையாக மாணவிகள் சித்தியடைந்ததோடு இராமகிருஷ்ண மிஷனால் நடத்தப்படுகின்ற பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி போன்றவற்றில் மாணவர்கள் சிறப்பு தேர்ச்சி பெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகக் காணப்பட்டன.

### (viii) களுதாவளை உயர்தர கலவன் பாடசாலை

இப்பாடசாலை 1943 ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியருமாக மெதடிஸ்த மிசனரி கல்வி நடவடிக்கைகளை எதிர்த்து உருவாக்கம் பெற்றது. 1954 ஆம் ஆண்டில் 325 மாணவர்கள் 8 ஆசிரியர்களாக பாடசாலை வளர்ச்சி அடைந்தது. அக்காலத்தில் சுவாமி நடராஜானந்தா அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தார். குறிப்பாக சுவாமி விபுலானந்தர் 1943 ஆம் ஆண்டு பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலை சம்பவத்

திரட்டு புத்தகத்தில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று வாழ்த்துச் செய்தியை பதிவு செய்துள்ளதாக அறியமுடிகின்றது.

#### (ix) பழுகாமம் உயர்தர கலவன் பாடசாலை

1944 ஆம் ஆண்டு பழுகாமத்தில் ஒரு தமிழ் பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என்ற மக்களின் அயராத முயற்சியும் இராமகிருஷ்ண சங்கத்தின் செயற்பாடும் இப்பாடசாலை உருவாகக் காரணமாக அமைந்திருந்தது. சமகாலத்தில் பொது முகாமையாளராக இருந்த சுவாமி இருதஜானந்த மகாராஜ் அவர்களின் அருள் நிறைந்த பேராதரவு பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. பின்னர் 1945 ஆம் ஆண்டு 250 மாணவர்களையும் 7 ஆசிரியர்களையும் கொண்டதாக பாடசாலை வளர்ச்சி பெற்றது. இப்பாடசாலையில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பெண் பிள்ளைகள் பலரும் உயர்கல்வி கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அத்தோடு அங்கு தமிழோடு ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. குறிப்பாக 1954 ஆம் ஆண்டில் 860 மாணவர்களையும் 10 ஆசிரியர்களையும் கொண்டதாகக் காணப்பட்டது.

#### (x) கொக்கட்டிச்சோலை விபுலானந்த வித்தியாலயம்

பாடசாலை 1934 ஆம் ஆண்டு தான்தோன்றீஸ்வரர் ஆலய பூசகர் திரு.ஆ.கு.சின்னத்தம்பி குருக்களை முகாமையாளராகக் கொண்டு ஒரு சைவப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப தலைமை ஆசிரியராக திரு.கா.குஞ்சுத்தம்பி என்பவர் தொண்டாற்றினார். இப்பாடசாலைக்கு வேண்டிய நிலம் திரு.சி.ஏகாம்பரப்பிள்ளை, திரு.த.திருமேனிப்பிள்ளை போன்றோர்களால் உபகரிக்கப்பட்டது. பாடசாலை தற்காலிக கட்டடத்தில் இயங்கியது. பின்னர் 1937 ஆம் ஆண்டுளில் அரசினால் பதிவு செய்யப்பட்டு சுவாமி விபுலானந்த அடிகளார் அதன் முகாமையாளராகவும் எழுத்தாளராக சுவாமி நடராஜானந்தரும் பணியாற்றினர்.

#### (xi) ஆரையம்பதி உயர்தர கலவன் பாடசாலை

ஆரையம்பதியில் சைவப்பாடசாலை 1912 ஆம் ஆண்டு உருவாக்கம் பெறும்வரை மெதடிஸ்த மிஷனூடாகவே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களப்பு கச்சேரியில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவுக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு.அருளம்பலம் என்னும் பெரியவர் இங்குள்ள ஏனைய பெரியார்களுடன் கலந்தாலோசித்து சைவப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்குரிய ஒழுங்கினை முன்னெடுத்தார். திரு.சின்னத்தம்பி உபாத்தியாயர், திரு.தம்பாப்பிள்ளை கொஸ்தப்பர், குழந்தைவேல் உடையார் ஆகிய பெரியோர்களின் முயற்சியால் கட்டுமான வேலைகள் முடிவுற்றன. சகோதரி அவபாமியா அம்மையார் இப்பாடசாலையை 1912 ஆம் ஆண்டு திறந்து வைத்தார்கள். இக்காலத்தில் முதலாளி கா.வ.மார்க்கண்டன் அவர்கள் பொது முகாமையாளராகவும் திரு.சின்னத்தம்பி அவர்கள் ஆசிரியராகவும் கடமையாற்றினார்கள். 1950 ஆம் ஆண்டில் பாடசாலையில் 320 மாணவர்களுக்கு ஒன்பது ஆசிரியர்கள் சேவையாற்றினர். பின்னர் 1956 ஆம் ஆண்டில் 480 மாணவர்களையும் 13 ஆசிரியர்களையும் கொண்டதாக வளர்ச்சி அடைந்தது.

#### (xii) கல்லடி உப்போடை உயர்தர பெண்கள் பாடசாலை

இப்பாடசாலையை அமைக்க திரு.கா.கதிர்காமத்தம்பி உடையார், திரு.தோ.கு.சபாபதிபிள்ளையுடையார் போன்றவர்கள் பெரும் முயற்சியெடுத்தனர். குறிப்பாக திரு.தோ.சபாபதிபிள்ளை உடையார் பாடசாலை கட்டுமானத்திற்காக கல்லடி-உப்போடையில் உள்ள பெரியார் வளவை நன்கொடையாகக் கொடுத்தார். 1912 ஆம் ஆண்டு பாடசாலைக்கான அத்திவாரம் சகோதரி அவபாமியா அம்மையாரால் நடப்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனிடம் பெண்கள் பாடசாலையை ஒப்படைக்கும் வரை திரு.க.கதிர்காமத்தம்பி உடையாரும் திரு.தோ.கு.சபாபதிப்பிள்ளை உடையாரும் போஷகர்களாகவும், திரு.நொ.சீ.செல்வதுரை

காரியதரிசியாகவும் திரு.சீ.குமரையா உபகாரியதரிசியாகவும் திரு.தோ.கு.சின்னத்தம்பி தனாதிகாரியாகவும் திரு.நொ.க.நல்லதம்பி முகாமையாளராகவும் திரு.க.அம்பிகைபாகப்பிள்ளை உதவி முகாமையாளராகவும் இருந்து பாடசாலையின் நிருவாகத்தைத் திறம்பட முன்னெடுத்தனர் (சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா மலர், 1992).

பின்னர் இப்பாடசாலையானது 1926 ஆம் ஆண்டுகளில் இராமகிருஷ்ண மிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. சமகாலத்தில் சுவாமி விபுலானந்தரிடமே அவ்வதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் தமிழ் சிரேஷ்ட கலவன் பாடசாலையாக விவேகானந்தா வித்தியாலயம் என்ற பெயருடன் 1948களில் இயங்கியது. பிரதானமாக இப்பாடசாலை மாணவர்கள் கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற கிராமிய நடன போட்டி, இலங்கை வானொலியில் பாட்டுப் போட்டி, கிழக்கு மாகாண சங்கீத போட்டி, விளையாட்டு, நடன, பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### (xiii) ஆனைப்பந்தி உயர்தர ஆண்கள் பாடசாலை

மட்டக்களப்பு நகரத்தில் வசித்த சைவ பெரியார்கள் 1902 ஆம் ஆண்டு ஒன்று கூடி ஒரு சைவ-ஆங்கிலப் பாடசாலை தேவையாக உள்ளது என்றும் அதனை ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலயத்தில் வடக்கு கிழக்கு மூலையில் அத்திவாரம் இட்டுத் தொடங்கினார்கள். அவர்களின் விடாமுயற்சியால் 1903 ஆம் ஆண்டு கட்டடவேலை முடியப் பெற்று பாடசாலை உதயமாகியது. பின்னர் அது 1907 ஆம் ஆண்டு அரசினர் உதவி நன்கொடை பெறும் கல்லடித்தெரு தமிழ்க் கலவன் பாடசாலையாக (Vernacular) பதியப்படலாயிற்று. சமகாலத்தில் முகாமையாளராக சமாதான நீதிவானாக இருந்த திரு.க.முத்தையா அவர்கள் பின் முதலியார் திரு.கே.வி.மார்க்கண்டன், வழக்கறிஞர் எஸ்.சின்னையா அவர்கள் முறையே பதவி வகித்தனர். பின்னர் சுவாமி விபுலானந்தர் பாடசாலை நிர்வாகத்தை இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாக 1925 ஆம் ஆண்டு கையேற்றார். பின்னர் இப்பாடசாலை ஆண், பெண் என்ற இரு பிரிவுகளாக்கி விவேகானந்தா மண்டபத்தில் மகளிர் பாடசாலையை நிறுவினர். பழைய பாடசாலைக் கட்டடத்தில் ஆண்கள் பாடசாலை நடைபெற்றது. அங்கு 200 மாணவர்கள் 6 ஆசிரியர்கள் என கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பின்னர் இப்பாடசாலை இடவசதி கருதி சுவாமி நடராஜானந்தாஜி அவர்களால் 1957 ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டு பெரிய பாடசாலையாகக் கட்டப்பட்டது.

### (xiv) ஈச்சந்தீவு பிரதம கலவன் பாடசாலை

இப்பாடசாலையானது மங்கிகட்டு, ஈச்சந்தீவு, நாவற்காடு என்ற மூன்று கிராம மக்களைக் கருத்திற் கொண்டு ஈச்சந்தீவு கிராமத்தில் நிறுவப்பட்டது. குறிப்பாக இந்து மக்கள் வாழ்கின்ற இப்பிராந்தியத்திலே ஒரு சமய பாடசாலை உருவாக வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு ஈச்சந்தீவு பெரியார் திரு.வா.வேலாப்போடி, விளாவட்டவான் திரு.சே.பாலிப்போடி அவர்களின் முயற்சியால் உருவாக்கம் பெற்றது. சமகாலத்தில் திரு.ஜி.எஸ்.சோமசுந்தரம் ஆசிரியரே 1944 ஆம் ஆண்டு பாடசாலையை ஆரம்பித்து பாடசாலைக்குச் சொந்தமாக ஏக்கர் நிலத்தையும் உறுதி சாதனங்களையும் எழுத்து மூலம் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தாரிடம் ஒப்படைத்தார். சமகாலத்தில் 150 மாணவர்கள், 4 ஆசிரியர்கள் கடமையாற்றினர்.

### (xv) சித்தாண்டி சித்திரவேல் வித்தியாலயம்:

1945 ஆம் ஆண்டு சித்தாண்டி கிராமப் பெரியார்களின் முயற்சியினால் பாடசாலை அமையப் பெற்றது. இப்பாடசாலையானது இராமகிருஷ்ண மிஷன் முகாமையாளராகவிருந்த சுவாமி இருதயானந்தரின் ஆசியுடன் பாடசாலை திறக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பாடசாலைகளில் 100 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் கடமையாற்றினர்.

இப்பாடசாலை 1946 ஆம் ஆண்டில் அரசினால் பதியப்படும்வரை பாடசாலையின் செலவுகளை கிராம மக்களே நிர்வகித்து வந்தனர். அத்தோடு பாடசாலைகளிலே ஆங்கிலம் உப பாடமாகக் கற்பிக்கப்பட்டதோடு நெசவு வேலை, தும்பு வேலை, வீட்டுப்பணி, தையற் பயிற்சி என வாழ்க்கைத் தேர்ச்சிக்கான அலகுகளிலும் விசேடமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### (xvi) முறக்கொட்டான்சேனை ஸ்ரீ கணேசானந்தா வித்தியாலயம்

இப்பாடசாலை 1914 ஆம் ஆண்டில் திரு.கே.வேலுப்பிள்ளை அவர்களால் கட்டப்பட்டு 1919 ஆம் ஆண்டு வரை அவர்களின் பரிபாலனத்தின் மேற்பார்வையில் நடாத்தப்பட்டது. 1920 ஆம் ஆண்டில் திரு.என்.கே.நல்லதம்பி நொத்தாரிஸ் அவர்கள் கையேற்று 1927 ஆம் ஆண்டு வரை இயங்கியது. பின்னர் இராமகிருஷ்ண சங்கம் கையேற்று நடாத்தியது (1927). இப்பாடசாலையில் 180 மாணவர்களுக்கு 6 ஆசிரியர்கள் சேவை புரிந்தார்கள்.

### (xvii) திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம்

திருகோணமலையில் சைவத்தமிழ் ஆண்கள் பாடசாலை, சைவ ஆங்கில ஆண்கள் பாடசாலை என இரு பாடசாலைகள் பத்திரகாளியம்மன் கோயிலுக்கும் பெரிய மைதானத்துக்கும் பக்கத்தில் தொடங்கப்பட்டன. இவ்விரு பாடசாலைகளிலும் ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்புவரை பிள்ளைகள் கல்வி கற்றனர். தமிழ் பாடசாலை ஒரு சிறிய ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு திரு.வ.தம்பையா ஆசிரியர், திரு.அ.பரமசாமி ஆசிரியர் என்போர் முறையே கடமையாற்றினர். 1925 ஆம் ஆண்டு பாடசாலை இராமகிருஷ்ண சங்கத்திற்கு கையளிக்கப்பட்டது. இதிலிருந்து பாடசாலை பலவகையிலும் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுவாமி விபுலானந்தர் பாடசாலைக்காக தம்பர் வளவை விலைக்கு வாங்கி புதுக் கட்டடங்களோடு பாடசாலைக்கு ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயப் பாடசாலையாக இயங்கியது. இங்கு திரு.பரமசாமி மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த பண்டிதர் திரு.செ.பூபாலப்பிள்ளை, காரைதீவைச் சேர்ந்த திரு.கே.கணபதிப்பிள்ளை, ஸ்ரீ குமாரசுவாமி ஐயர் போன்றோர் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். 1932 ஆம் ஆண்டில் முதன்முறையாக எட்டாம் வகுப்பில் இரு பிள்ளைகள் சித்தி அடைந்தார்கள். 1933 ஆம் சுதேச பாடசாலையாகவும் உயர்தர பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டது. எஸ்.எஸ்.சி வகுப்பு வரை பல பிள்ளைகள் படித்து தேர்ச்சி அடைந்தனர். அவர்களில் பலர் இங்குள்ள கல்லூரிகளிலும் இப்பாடசாலைகளிலும் கடமையாற்றினர். இப்பாடசாலையில் 1952 ஆம் ஆண்டுகளில் 375 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கடமையாற்றினர்.

### (xviii) தம்பலகாமம் ஸ்ரீ சாரதா வித்தியாலயம்

இக்கிராமத்தில் மூன்று அரசினர் கலவன் பாடசாலைகள் இருந்தும் பெண்களுக்கான ஒரு கல்வி நிலையம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இதனால் இங்குள்ள பெண் சமூகம் இந்துப்பண்பாடு நிறைந்த உயர்தர கல்வி பெறுவதற்கு வசதியற்றவர்களாக இருந்து வந்தார்கள். இதை உணர்ந்த பொது மக்களும் இங்குள்ள பெரியார்களும் ஒன்று சேர்ந்து கிராமத்தின் மத்தியில் பெண்களுக்குகென ஒரு கல்வி நிலையம் அமைத்தார்கள். அதற்கு ஸ்ரீ சாரதா வித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டது. பாடசாலையை 1953ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பேற்றுக் கொண்டது. 1954 ஆம் ஆண்டு திருமதி சிவபாக்கியம் ஏரம்பமூர்த்தி நிரந்தர தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். அவரோடு மூன்று உதவி ஆசிரியர்களும் இருந்தனர். பின்னர் இப்பாடசாலையை அரசினர் பதிவு செய்தனர். அப்போது பாடசாலை மாணவர்கள் 150ஆக இருந்தனர். பின்னர் தொடர்ச்சியான முயற்சியால் 5 ஆசிரியர்களையும் 165 மாணவர்களையும் கொண்ட கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

எனவே காலனித்துவ சமய எதிர்ப்பு வாதத்திற்கு மத்தியில் இலங்கையில் 26 பாடசாலைகளை நிறுவிய சுவாமி விபுலானந்தரால் முன்னெடுக்கபட்ட கல்விப் பணிகளில் 18 பாடசாலைகள்

கிழக்கிலங்கையை மையப்படுத்தியதாக உருவாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாக அமைகின்றது. இப்பாடசாலைகள் இந்து இளைஞர் சங்கங்கள், பொதுமக்களின் அயராத முயற்சி, தனவந்தர்களின் முதலீடுகள், இராமகிருஷ்ண மிஷனால் முன்னெடுக்கபட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகள், குறிப்பாக கிழக்கு மண்ணின் மைந்தரான சுவாமி விபுலானந்தரின் தூர நோக்குடனான சிந்தனை போன்றவற்றின் கூட்டு முயற்சியால் மட்டுமே சாத்தியமாகியது.

இன்று தமிழ்பேசும் கிழக்கிலங்கை கல்வி அறிவுள்ள இந்து அமைப்புச் செயற்பாடுகளைக் கொண்ட சமூகமாக உருவாக்கம் பெற்றுள்ளமைக்கு அன்று இராமகிருஷ்ணமிஷனால் இடப்பட்ட அடித்தளமே சான்றாக அமைகின்றது. இராமகிருஷ்ண சங்க நிர்வாகத்தின் கீழ் 43 வருடங்களாகச் செயற்பட்ட 26 பாடசாலைகள் இலங்கை அரசாங்கத்தால் 1960 ஆம் ஆண்டுகளில் பொறுப்பேற்கப்பட்டன. சில பாடசாலைகள் பெயர் மாற்றங்களோடு கட்டுமானப் பணிகள் விரிவடைந்து மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன. இருந்தபோதிலும் சில பாடசாலைகள் அதே பெயர் நாமங்களோடு சிறந்த கல்விச்சாலைகளாக மிளிர்கின்றன.

இதற்கு இராமகிருஷ்ண மிஷனது கல்விக் கொள்கையும் நாடு, தேசம் கடந்து கிழக்கிலங்கையில் அதனோடு சேர்ந்து பணியாற்றிய சுவாமிகளது அயராத முயற்சியும் உறுதுணையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இன்று இராமகிருஷ்ண மிஷனால் முன்னெடுக்கப்படுகின்ற நூற்றாண்டு விழா மலர்கள், சஞ்சிகைகளில், மேற்படிப் பாடசாலைகளில் கல்வி கற்று உயர் பதவிகளை வகிக்கின்ற பலரும் சாட்சியங்களாக தமது அனுபவங்களை நன்றியுணர்வோடு பதிவிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 4.4. பத்திரிகைகள் மற்றும் நூலகங்களினூடாக முன்னெடுக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகள்

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் செய்தித்தாள்கள் இந்து மறுமலர்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தின. ஒவ்வொரு புதன்கிழமைகளில் வெளியிடப்பட்ட இந்து சாதனம் இலங்கையில் இந்து சமூகத்திற்கு சேவை செய்யும் ஒரு செய்தித்தாளாக அமைந்தது. 1889 ஆம் ஆண்டுகளிலிருந்து நிறுவப்பட்ட இப்பத்திரிகை, பரந்த அளவில் தமிழ் மக்களிடத்தில் புழக்கத்தில் இருந்தது. அதன் பக்கங்கள் முழுவதும், இந்துக்கள் தொடர்பான கதைகள், சமய நூல்கள் மற்றும் தமிழ் பேசும் சமூகங்களிடையே சமய மறுமலர்ச்சி பற்றிய விவாதங்கள் முக்கியமான பகுதிகளாக அமைகின்றன. பண்டிதர் எஸ்.எம்.நடேச சாஸ்திரியின் வால்மீகி இராமாயணத்தின் நேர்த்தியான மற்றும் நன்கு எழுதப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பு ஒவ்வொரு தமிழ் வீடு மற்றும் பாடசாலை நூலகத்திலும் அவசியம் இருக்க வேண்டிய ஒன்றாகக் காட்சிப்படுத்தப்பட்டது. பாலகாண்டம் (244 பக்கங்கள்), அயோத்தியாகாண்டம் (501 பக்கங்கள்), ஆரண்யகாண்டம் (254 பக்கங்கள்), கிஷ்கிந்தகாண்டம் (226 பக்கங்கள்), சுந்தரகாண்டம் (260 பக்கங்கள்) மற்றும் யுத்தகாண்டம் (702 பக்கங்கள்) ஆகியவற்றைக் கொண்ட ஆறு காண்டங்களின் ஒருங்கிணைந்த தொகுப்பின் விலை ரூ.12.08. ரூபாயாக அமைந்திருந்து (The Hindu Organ, 1919).

பிரித்தானியர் கால ஆவணக்குறிப்பு நூலான இலங்கை நீலப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு (1929, 1930, 1931) சிவானந்தா வாசிப்பு அறை இராமகிருஷ்ண மிஷனின் கீழ் இயங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு மட்டக்களப்பு இந்து வாலிபர் சங்கத்தால் 1922 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நூலகத்தில் 80பேர் அங்கத்தவர்களாகக் காணப்பட்டனர்.

**அட்டவணை:03 இராமகிருஷ்ணமிஷனின் கீழ் செயற்பட்ட நூலக விபரம்**

| நூலகத்தின் பெயர் | அங்கத்தவர்கள் | | | சந்தா |
|---|---|---|---|---|
| | 1929 | 1930 | 1931 | |
| சிவானந்தா வாசிப்பு அறை | 91 | 91 | 111 | நன்கொடைகள் மற்றும் மக்களின் பங்களிப்புகள் |
| மூலம்: The Ceylon Blue Books, 1929, 1930 & 1931. | | | | |

இராமகிருஷ்ண மிஷனால் வெளியிடப்படும் மாதாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன மனித வாழ்க்கைக்கான வழிகாட்டிகளாக அமைந்திருந்தன. உதாரணமாக, இராமகிருஷ்ண விஜயம் ஒவ்வொரு மாதமும் 1,500 இற்கும் மேற்பட்ட பிரதிகளில் சென்னை மைலாப்பூரில் அச்சிடப்பட்டன. காலத்திற்குக் காலம் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, காரைதீவு, ஆரையம்பதி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பெரிய கல்லாறு, செங்கலடி, மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புத்தகக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. மேற்கூறப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகளில் சிறப்பு உரைகள் அல்லது சொற்பொழிவுகளை வழங்க இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் அன்புடன் அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது..

## 5. முடிவுரை

கிழக்கிலங்கையின் கல்வி வளர்ச்சியிலும் பாடசாலைகளின் உருவாக்கத்திலும் இன்றுவரை இராமகிருஷ்ணமிஷன் என்ற அமைப்பு தனித்துவமானதாக அமைகின்றது. ஏனெனில் இன்று பல பாடசாலைகளின் பெயர்கள், வீதிகள், பொதுவான கட்டுமானங்கள் இராமகிருஷ்ணமிஷன், விபுலானந்தர் போன்ற பெயர் நாமங்களை இணைத்துச் செயற்படுகின்றமை அவர்களின் சேவைக்கு மக்கள் கொடுக்கும் கௌரவமாகப் பார்க்கப்படுகின்றது. இப்புரிதல் தற்கால சமூகத்தோடு மட்டும் முற்றுப் பெறாமல் எதிர்கால சந்ததியினருக்கும் தொடரப்பட வேண்டும். பிரித்தானிய காலனித்துவ சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் இலாப நோக்கம் கருதி முன்னெடுக்கப்பட்ட நிலையில் இராமகிருஷ்ணமிஷன் காலனித்துவ சவால்களைத் தாண்டி சேவை நோக்கோடு உயிர்ப்புப பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சமூகப் பொருளாதார முன்னேற்ற அபிவிருத்திகளுக்கு கல்வி வளர்ச்சியே அடித்தளமாக அமைந்துள்ளது. குறிப்பாக பாடசாலைகளின் உருவாக்கம், ஆச்சிரமம், பெண் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தல், நூலக வசதிகளின் செயற்பாடு, வாழ்வியலுக்கான பயிற்சிகள், சுய தொழிலுக்கான பயிற்சிகள் என்பன இன மத பேதம் கடந்து முன்னெடுக்கப்பட்டமை தமிழ் சமூகத்தில் பாரிய மாற்றத்திற்கு வழிவகுத்தது.

அந்தவகையில் சமகாலத் தேவையறிந்து ஆங்காங்கே உருவாக்கபட்ட விவேகானந்த சபைகள் தம்மைப் பலப்படுத்தி ஒருங்கிணைத்துக் கொண்டன. பின்னர் அவை சேவையை நோக்காகக் கொண்டு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் என்ற பெயரில் ஒரு நிறுவனமாக உருவாக்கம் பெற்றது. அதனூடாகப் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை அனைத்திற்கும் அடித்தளமாக அமைவது கல்வியே. அதனை உரியமுறையில் மக்களுக்கு வழங்குகின்றபோது அதனுடன் இணைந்த இதர செயற்பாடுகள் இயல்பாகவே நடைபெறும்.

அதற்கு பல்புலமையாளரான சுவாமி விபுலானந்தரே தாம் பிறந்து வளர்ந்த இடத்தை நிருவகிக்கின்ற பெறுப்பைப் பெற்றுக் கொண்டமை இந்நிறுவனத்தின கல்வி வளர்ச்சிக்கு இன்னும்

சாதகமாக அமைந்தது. அந்தவகையில் 26 பாடசாலைகளின் முகாமையாளராகச் செயற்பட்ட விபுலானந்தர் குறுகிய காலத்தில் தன்னிறைவான பணியை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆண் பிள்ளைகளை மட்டுமல்லாது பெண்பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டி ஒழுக்கம், பண்பாடு. கலாச்சார விழுமியங்ளையும், சுயதொழில் முயற்சிகளையும் சேர்த்து கற்பித்தமை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

**உசாத்துணைகள்**


எதிர்மன்னசிங்கம்.எஸ்., (1993). புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. விபுலம் பதிப்பகம்

கோபாலசிங்கம், சீ., (2011). மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம். ஆதவன் அச்சகம்.

Addalai. (2007). Cultural Council. Divisional Secretary, Addalaichenai.

அழகரெத்தினம், செ., (2001). சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகளும் தொண்டுகளும். தமிழ் மன்றம்.

35th Anniversary Celebration of Sri Shanmuga Home Souvenir. (1992). Trincomalee.

75th Anniversary (1923–1998), Commemoration Publication of Sri Shanmuga Hindu Ladies College, Trincomalee. (1998).

75th Anniversary Journal of Shivananda School: 1929–2004. (2007). Sun Publication.

எதிர்மன்னசிங்கம்.எஸ்., (1993). புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. விபுலம் பதிப்பகம்.

Gandhi, M. K. (1959). India of my dreams. Navajivan Publishing House.

Gupta, M. (1942). The gospel of Sri Ramakrishna. Ramakrishna-Vivekananda Center.

கோபாலசிங்கம், சீ., (2011). மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம். ஆதவன் அச்சகம்.

Kinsley, D. (2003). Hinduism: A cultural perspective. Pearson.

Konai Natham. (2018). Trincomalee R.K.M Sri Koneswara Hindu College. Old Students Association.

மகேஸ்வரலிங்கம், க.,(2008). மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும். தமிழ்ச்சங்கம், கொழும்பு.

மணி, பெ.சு.,(1997). இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம். இராமகிருஷ்ணர் மிசன், கொழும்பு.

மௌனகுரு, சி., (1993). சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும். விபுலம் பப்ளிகேஷன்.

Ramakrishna Math and Ramakrishna Mission. (2007). Platinum Jubilee Celebration. Belur Math, India.

Souvenir of Sri Ramakrishna Mission Educational Institutions in Ceylon: 1297–1957. (2022). Vivekanandan, Vivekananda Sabah.

The Ceylon Almanac and Annual Register. (1854). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1918). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1921). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1923). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1929). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1930). Government Printers, Ceylon.

The Ceylon Blue Book. (1931). Government Printers, Ceylon.

The Disciples of Sri Ramakrishna. (1943). Pavitrananda Advaita Ashrama, Mayavat, Almora Himalayan.

The Hindu Organ. (1915, January 21). Saiva Prakasa Press, Jaffna.

The Hindu Organ. (1919, January 13). Saiva Prakasa Press, Jaffna.

திமிலைமகாலிங்கம், (1992). சிறுவருக்கு விபுலானந்தர். தேனமுத இலக்கிய இலக்கிய மன்றம்.

நீலமாதாவானந்தர், (2025). சிறுவர்களுக்கு விபுலானந்தர். சுவாமி விபுலானந்தர் கலை மன்றம்

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழா, (2021). கும்பாபிஷேக சிறப்பு மலர், இராமகிருஸ்ண மிஷன். கல்லடி – உப்போடை, மட்டக்களப்பு.

சிவசுப்ரமணியம், வ., (1993). விபுலாநந்த தரிசனம். மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா மலர்:1892-1992, (1992). விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை. கல்லடி.